DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 341 / 2022
Deposition of PW7/ LW9

| | | |
|---|---|---|
| Name | : | திரு.இராமசாமி |
| Father's / Husband Name | : | அருணாச்சலம் |
| Village | : | கடமலைக்குண்டு |
| Taluk | : | ஆண்டிபட்டி |
| Calling | : | சார்பு ஆய்வாளர் |
| Age | : | 59 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08.04.2026.

**1ம் எதிரி ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355-ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் தற்போது பி.சி. பட்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.03.2022 ம் தேதி காலை 9.00 மணிக்கு மயிலாடும்பாறை காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது மயிலாடும்பாறை காவல் நிலைய மனு எண்.26/2022 யை பார்வையிட்டு மயிலாடும்பாறை காவல் நிலைய குற்ற எண்.16/2022 பிரிவுகள் 147,427,332,353,355,294(b).506(2) இ.த.ச. பிரகாரம் வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 .**

2. அன்றைய தினம் 11.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சம்பவயிட சாட்சிகளான செல்வம் மற்றும் நீதிராஜன் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ.4 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5** . சாட்சிகள் 1 செல்லத்துரை, 2 அருண், 3 தவராஜா, 4 கார்த்தி ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் தனித்தனியே பதிவு செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. அ.சா.1 செல்லத்துரை வனத்துறையில் பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். அ.சா.2 அருண் என்பவரும் வனத்துறையில் பணிபுரிந்து

வருகிறார் என்றால் சரிதான். அ.சா.3 நீதிராஜன் வனத்துறையின் கீழ் பணிபுரிந்து வருகிறார் என்றால் சரியல்ல. அ.சா.1 என்பவர் அரசு பேருந்தினை மஞ்சனூத்து சோதனைச் சாவடியில் இருந்து அரசரடி செல்லவிடாமல் பேருந்தினை மறித்த காரணத்தினால் தான் இந்த பிரச்சனை ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. தேனியில் இருந்து அரசரடி வழியாக வெள்ளிமலை செல்லும் அரசு பேருந்து கடந்த 40 வருடங்களாக அந்த வழியாகத்தான் சென்று வருகிறது என்று சொன்னால் சரிதான்.

2. மேற்படி அரசு பேருந்தினை மஞ்சனூத்து செக்போஸ்ட் – ல் அரசரடிக்கு செல்லவிடாமல் மறித்ததால் தான் பிரச்சனை ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பிரச்சனைக்கு காரணம் அ.சா.1 தான் என்றால் சரியல்ல. நான் அ.சா.1 கொடுத்த புகாரினை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.1 சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.04.08 17:45:22 +0530

Judicial Magistrate,
Andipatti.